1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை நனோ தொழில்நுட்ப (தனியார்) கம்பனியின் (“கம்பனி”) 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப, நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS for SMEs) இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு (SLFRS for SMEs) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	முன்னைய ஆண்டுக்கான சீராக்கங்களுக்காக கழிப்பனவுகள் ரூபா 21,226,486 மற்றும் சேர்ப்பனவுகளாக ரூபா 4,046,614 என மொத்தம் ரூபா 17,179,872 தேறிய தொகையினை சீராக்கலாக நிறுத்திவைத்த வருவாயில் சீராக்கிய போதிலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLFRS for SMEs) பந்தி 10.21 இன் படி, ஒப்பீட்டு தரவுகள் மாற்றியமைக்கப்படவோ இல்லை. மேலும், இந்நியமங்களின் பத்தி 10.23 இன் படி நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையான வெளிப்படுத்தல்களும் செய்யப்படவில்லை.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பத்திகள் 10.21 மற்றும் 10.23 இன் கீழ், முன்னைய காலப் பிழைகள் தொடர்பான அவதானிப்பை கம்பனி ஏற்றுக்கொள்கிறது. நிர்வாகச் செலவுகளுக்கான ரூபா 17,179,872 சீராக்கல்களும், 2023/2024 ஆம் ஆண்டிற்கான வருமான மீளப் பெறுகையும் நடைமுறை காலத்திலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, முன்னைய நிதியாண்டுப் பிழைகள் தொடர்பான சீராக்கல்களின் ஒப்பிட்டுத் தரவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதோடு, முன்னைய நிதியாண்டுப் பிழைகளுக்கான அவசியமான வெளிப்படுத்தல்களும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரிவு 17.19 இன் படி, 2025 மார்ச் 31 இல் உள்ளவாறு முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட போதிலும், இன்னும் பயன்பாட்டில் உள்ள ரூபா	முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை மீள்மதிப்பீடு செய்வதானது, அச்சொத்தின் ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்திற்குள்ளேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், இத்தகைய சொத்துக்களை ERP கணினி	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின்

	1,021,841,413 பெறுமதியிலான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி ஆகியவற்றை மீளாய்வு செய்து அதற்கேற்ப பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.	அமைப்பில் மீள்மதிப்பீடு செய்ய முடியாது என்பதை முகாமைத்துவம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அறிக்கையிடல் நோக்கங்களுக்காக மாத்திரமே முழுமையாகத் தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வது, கணிசமான வளங்களை விரயமாக்குவதுடன் தேவையற்ற நிதிச் சுமையையும் ஏற்படுத்தக்கூடும்.	பயன்பாட்டுக் காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி என்பவற்றை மீளாய்வு செய்வதற்கும் பதிவுசெய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	ரூபா 3,441,163,367 செலவில் அமைந்த கட்டடமொன்று 3.33 சதவீதம் என்ற வீதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ள அதேவேளை, வருமான வரிக்காக 5 சதவீதம் என்ற வீதத்தில் மூலதனக் கொடுப்பனவுகள் கோரப்பட்டுள்ளன. எனினும், பிற்போடப்பட்ட வரியைக் கணக்கிடும்போது வரி விதிக்கப்படக்கூடிய தற்காலிக வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளாமையினால், பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு ரூபா 8,635,114 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிதிக்கூற்றுக்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 29 ஆம் பிரிவிற்கு அமைவாக அமைந்திருக்கவில்லை.	கட்டிடம் 1பீ மீதான பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தொடர்பான அவதானிப்பை கம்பனி ஏற்றுக்கொள்கிறது. இப் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு சீராக்கப்பட்டு, அதற்குரிய பிற்போடப்பட்ட வரிச் செலவீனம் நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்படும்.	மூலதனக் கொடுப்பனவுகளைக் கருத்தில் கொண்டு பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு அல்லது சொத்து கணக்கிடப்பட வேண்டும் என்பதோடு, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 29 ஆம் பிரிவிற்கு இணங்க கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பந்தி 27.2 இன் படி, அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் கையிருப்புகள் ஏதேனும் சேதஇழப்புக்கு உட்பட்டுள்ளதா	கம்பனியானது அவதானிப்பை ஏற்றுக்கொள்கிறது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பந்தி 27.2 க்கு அமைவாக, நானோ உரத் திட்டம் மற்றும் பொது இரசாயன நூலக மீதி உட்பட	கையிருப்புகளின் சேதஇழப்புக்கள் தொடர்பில் மதிப்பீடுகள் செய்யப்பட வேண்டும் என்பதோடு, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு

	என்பதை ஒரு நிறுவனம் மதிப்பீடு செய்ய வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட நானோ உரத் திட்டத்துடன் தொடர்புடைய ரூபா 2,310,960 பெறுமதியான பூர்த்திசெய்யப்படாத மற்றும் ரூபா 1,412,601 பெறுமதியான முடிவுற்ற பொருட்கள், அத்துடன் 2018 ஆம் ஆண்டிலிருந்து எவ்வித நகர்வுமின்றி காணப்படுகின்ற ரூபா 2,726,697 பெறுமதியான பொது இரசாயன நூலக மீதி போன்ற காலாவதியான கையிருப்புகளுக்காக நிதிப் கூற்றுகளில் ஒதுக்கம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.	மெதுவாக நகர்வடையக் அல்லது காலாவதியான பொருட்களுக்காக, அறிக்கையிடும் ஒவ்வொரு திகதியிலும் அனைத்துக் கையிருப்புகளின் கொண்டுசெல்லும் பெறுமதியை முகாமைத்துவம் மதிப்பீடு செய்து பொருத்தமான ஒதுக்கீடுகளைச் செய்யும்.	நியமங்களுக்கு அமைவாக ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(உ)	சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பந்தி 33.7 மற்றும் 33.9 இன் படி, முக்கிய முகாமைத்துவப் பணியாளர்களின் கொடுப்பனவுகள் பற்றிய தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். எனினும், கம்பனியானது பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 13,636,041 தொகையைக் கொண்ட சம்பளம் மற்றும் படிகள், கம்பனியின் பங்குதாரர்களால் 5 சதவீதம் என்ற சலுகை ஆண்டு வட்டி வீதத்தில் பெறப்பட்ட கடன், மற்றும் இப் பரிவர்த்தனையின் விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	முக்கிய முகாமைத்துவப் பணியாளர்களின் கொடுப்பனவுகளை வெளிப்படுத்துவது தொடர்பாக, முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி பணிப்பாளர் சபையிலிருந்து விலகுவதற்கான ராஜினாமா கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார் என்பதை கம்பனி சுட்டிக்காட்டுகிறது. இதனை கம்பனியின் செயலாளரிடம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். அதற்கமைய, அவரது சம்பளம் மற்றும் படிகளை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. தொடர்புடைய தரப்பினரின் கடன் தொடர்பாக, மாஸ் கபிட்டல் (தனியார்) கம்பனியிடமிருந்து பெறப்பட்ட கடன், அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உட்பட, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பந்தி 33.9 க்கு அமைவாக வெளிப்படுத்துவதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.	அறிக்கையிடும் காலப்பகுதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ பதவி விலகல் அல்லது பதவியில் மாற்றங்கள் ஏதேனும் ஏற்பட்ட போதிலும், முக்கிய நிர்வாகப் பணியாளர்களின் கொடுப்பனவுகள் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்காக அரச வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டின் மூலம் பெறப்பட்ட ரூபா 226,058,502 மூலதன நிதிக்காகப் பங்குகளை வழங்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மாறாக, இத்தொகையானது தொடர்புடைய தரப்பிடமிருந்து பெறப்பட்ட முன்பணமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.	சிலின்டெக் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, இம்மூலதன நிதிக்காகப் பங்குகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதோடு, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 33.8 ஆம் பந்திக்கு அமைவாக நிதி அறிக்கைகளில் பொருத்தமான வெளிப்படுத்தல்களையும் உறுதிசெய்யும்.	மூலதன நிதிக்காகப் பங்குகளை வழங்குவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	2012 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் மூலதனப் பங்களிப்புகளாகப் பெறப்பட்ட ரூபா 2,079,917,175 மானியத் தொகைகளுக்காக அரசாங்கத்திற்குப் பங்குகளை வழங்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பொருந்தக்கூடிய அனுமதிகள் மற்றும் தேவைகளுக்கு அமைவாகப் பங்குகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	பொருந்தக்கூடிய அனுமதிகள் மற்றும் தேவைகளுக்கு அமைவாகப் பங்குகளை வழங்குவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5.3 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுக்களில் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக 2.6 குறிப்பில் கவனம் செலுத்துகின்றோம். கம்பனியானது மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 1,403,743,526 திரண்ட நட்டத்தை பெற்றிருந்ததுடன் அத்திகதியில் கம்பனியின் மொத்த சொத்துக்களின் பெறுமதிக்கு மேலதிகமான மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 41,234,049 ஆகும்.	நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தின் போது (EGM) கவனம் செலுத்தப்பட்டுள்ளது.	கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக அதிக அவதானத்துடன் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கான உரிய பரிசீலனை வழங்கப்பட வேண்டும்

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்பாட்டு வழிகாட்டி கைநூலின் 6.6 ஆம் பந்தி	2025 மார்ச் 31 அந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 03 மாதமும் 29 நாட்களும் தாமதத்தின் பின்னர் 2025 செப்டம்பர் 29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனுடன் வருடாந்த அறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இக்காலப்பகுதியில் ஏற்பட்ட முகாமைத்துவ மாற்றத்தின் காரணமாக, பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. நிதிக்கூற்றுக்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்தை கம்பனியானது ஏற்றுக்கொள்கிறது.	பொதுமுயற்சிகள் தொடர்பாக செயற்பாட்ட வழிக்காட்டிக் கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுகள் மற்றும் ஆண்டறிக்கையின் வரைவு உரிய காலப்பகுதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்படல் வேண்டும் என்பதோடு ஆண்டறிக்கையானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 11 ஆம் பிரிவு.	2024 மற்றும் 2025 மார்ச் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுகளுக்கான நிலையான சொத்துக்களின் வருடாந்த பௌதிக சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	ஊழியர் பற்றாக்குறை காரணமாக 2024 மார்ச் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிலையான சொத்துக்களின் வருடாந்த பௌதிகச் சரிபார்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. 2025 மார்ச் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பௌதிகச் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட்டது.	சுற்றறிக்கைக்கு அமைவாக நிலையான சொத்துக்களின் வருடாந்த பௌதிகச் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கம்பனியானது 2023 ஆகஸ்ட் மாதம் முதல் செலுத்த வேண்டிய நிலுவையாகவுள்ள ரூபா 32,703,895 பெறுமதி சேர் வரி) மற்றும் ரூபா 12,793,815 சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி என்பவற்றைச் செலுத்தியிருக்கவில்லை.	கட்டமைக்கப்பட்ட செலுத்தல் திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேவேளை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து SLIBTEC தொடர்பான பெறுமதி சேர் வரியை தீர்ப்பதற்கு வசதியாக அமைச்சின் தலையீடும் கோரப்பட்டு வருகின்றது.	பொருந்தக்கூடிய சட்டபூர்வத் தேவைகளுக்கு அமைவாக, நிலுவையிலுள்ள பெறுமதி சேர் வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி தொகைகளை அனுப்புவதற்கு முகாமைத்துவம் விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 140,834 இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 10,253,101 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,112,267 குறைவு அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 76,631,726 இனால் அதிகரித்தமை, நிர்வாக செலவினம் ரூபா 4,620,953 இனால் வீழ்ச்சியடைந்தமைக்கு எதிராக முறையே வியாபார வருமதியாளர்களின் பெறுமதிகுறைப்பு ரூபா 64,578,381 இனால் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கிரயம் ரூபா 30,484,778 இனால் அதிகரித்தமை என்பன இந்த குறைவுக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நேனோ உர அபிவிருத்தித் தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்வதற்காக கம்பனி 2012 மார்ச் 15 அன்று இந்திய கம்பனியொன்றுடன் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டிருந்ததுடன், அதன் மொத்தப் பெறுமதியான அமெரிக்க டொலர் 2,250,000 நான்கு தவணைகளில் பெறப்படுவதற்கு அட்டவணையிடப்பட்டிருந்தது.	நாகார்ஜுனா நிறுவனம் மெதுவாக விடுவிக்கப்படுகின்ற உரத்திற்கான உரிமைகளை விலைக்கு வாங்கியதுடன் அமெரிக்க டொலர் 1.0 மில்லியன் தொகையையும் செலுத்தியது. சிலின்டெக் நிறுவன ஆக்கஉரிமை கைமாற்றுவதுடன் அவர்கள் இரண்டாவது தவணைத் தொகையையும் செலுத்த	ஒப்பந்தத்திற்கு அமைவாகப் பெறப்பட வேண்டிய வருமானம் சேகரிக்கப்பட வேண்டும்.

எனினும், ஒப்பந்தத்திற்கு அமைவாக அமெரிக்க டொலர் 1,000,000 மாத்திரமே உரிய நேரத்தில் தீர்க்கப்பட்டிருந்ததுடன், 2013 ஜூன் 30 அன்று விலைப்பட்டியல் அனுப்பப்பட்டிருந்தபோதிலும் அமெரிக்க டொலர் 750,000 இன்னமும் பெறப்பட்டிருக்கவில்லை.	வேண்டியிருந்தது. எனினும், நிதிரீதியான சவால்கள் காரணமாக வாடிக்கையாளரால் நிலுவைத் தொகைகளைத் தீர்க்க முடியாமல் போனது. எமது பெயரில் உள்ள ஆக்கஉரிமைகளை நாமும் விடுவிக்கவில்லை என்பதுடன், பெறப்பட வேண்டிய மீதித் தொகை கிடைக்கப் பெறாவிடின், எமது ஆக்கஉரிமையைக் கொண்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என வாடிக்கையாளருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளோம்.	

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
தலைவர் அவர்கள் 2025 செப்டம்பர் தொடக்கம் கம்பனியின் நிறைவேற்றுப் பணிகளைப் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றார்.	2025 ஆகஸ்ட் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் சபை விவரக் குறிப்பிற்கு அமைவாக, பிரதம நிறைவேற்று அதிகாரி ஒருவர் நியமிக்கப்படும் வரை கம்பனியின் செயற்பாடுகளை இடைக்கால அடிப்படையில் மேற்பார்வையிடுமாறு தலைவர் கோரியிருந்தார். தலைமைத்துவ மாற்றக் காலத்தில் செயற்பாடுகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த ஏற்பாடு ஒரு தற்காலிக நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டது. ஆளுகை மற்றும் நிறைவேற்றுப் பணிகளுக்கு இடையே தெளிவான பிரிவினையைப் பேணுவதன் முக்கியத்துவத்தை கம்பனீ ஏற்றுக்கொள்வதுடன், பிரதம நிறைவேற்று அதிகாரி நியமிக்கப்பட்டதும் இந்நடவடிக்கை முறைமைப்படுத்தப்படும்.	பிரதம நிறைவேற்று அதிகாரியை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) அரசாங்க மானியம் ரூபா 32,372,109 உட்பட மொத்தம் ரூபா 65,873,148 செலவில் 2017 ஆம் ஆண்டில் ஒரு பசுமை இல்லம் உருவாக்கப்பட்டது. எனினும், இந்தப் பசுமை இல்லம் அதன் முழுத் திறனுக்குப் பயன்படுத்தப்படாமல், பெரும்பாலும் செயல்படாத நிலையிலேயே உள்ளது. இதன் காரணமாக, அறிக்கை திகதியன்று, கம்பனி பசுமை இல்லத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையவில்லை	இவ் வசதியானது நிறுவனத்தின் உட்புற மற்றும் கூட்டு விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், “Codgen“ மற்றும் 'LOLC Advanced Technologies“ ஆகிய நிறுவனங்கள் உடனான கூட்டு முயற்சிகள் உட்பட பிற கூட்டுச் செயல்பாடுகளுக்காகவும் இந்தப் பசுமை இல்ல வசதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்த வசதியை நீண்ட கால அடிப்படையில் வாடகைக்கு விடுவதற்காக, நிர்வாகம் தற்போது ‘‘வரையறுக்கப்பட்ட லங்கன் (தனியார்) கம்பனியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறது	சொத்துக்களை எதிர்பார்த்த நோக்கங்களுக்காக முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஆ) இலங்கையில் மருந்து உற்பத்தியின் வளர்ச்சியை ஆதரிப்பதற்கும், உள்ளூர் ரீதியாகச் செயலில் உள்ள மருந்து மூலப்பொருட்களின் (API) உற்பத்தியை ஊக்குவிப்பதற்குமாக 2017 ஆம் ஆண்டில் 'செயலில் உள்ள மருந்துப் பொருள் சோதனை உற்பத்தி நிலையம்' என்ற மூலோபாயத் திட்டம் தொடங்கப்பட்டது. அரசாங்க மானியங்கள் மூலம் இந்த சோதனை மையத்தை நிறுவுவதற்காக ரூபா 89,946,023 செலவிடப்பட்டது. ஆய்வக	சிலிண்டெக் நிறுவனம் தனது ஆய்வக அளவிலான பரிசோதனைகளை நிறைவு செய்து, தேவையான கிலோ அளவுகளை எட்டியதுடன், பகுப்பாய்வு சான்றிதழையும் பெற்றது. தொடர்ந்து, எங்கள் வணிக மேம்பாட்டுக் குழு இந்த தயாரிப்பை இலங்கை அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பித்தது. அவர்கள் ஹம்பாந்தோட்டையில் அமையவுள்ள ஒரு API சோதனைத் திட்டத்தில் தனிப்பட்ட முறையிலோ அல்லது கூட்டுறவாகவோ முதலீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். இருப்பினும், இத்திட்டத்திற்கு அரசாங்கத்தை விடவும்	சொத்துக்களை எதிர்பார்த்த நோக்கங்களுக்காக முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும்.

	மட்டத்தில் வெற்றிகரமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அதன்பின்னர் இத்திட்டம் கைவிடப்பட்டதுடன், எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார அல்லது சமூக நன்மைகள் எதையும் இது அடையவில்லை.	தனியார் துறையே நிதியளிக்க வேண்டும் என அரசு மருந்து நிறுவனம் கருதியதால், அவர்களின் கருத்திற்கு இணங்க இத்திட்டம் கைவிடப்பட்டது. இதில் பயன்படுத்தப்பட்ட சில உபகரணங்கள் தற்போது “கனிம ஆய்வகங்கள்“ மற்றும் “இயற்கை தயாரிப்பு ஆய்வகங்களால்“ ஏனைய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன	
(இ)	ரூபா 24,072,287 செலவில் நானோ உர தயாரிப்புக்கான தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்ட போதிலும், இதன் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டு, 2022 ஆம் ஆண்டில் இத்திட்டம் கைவிடப்பட்டது. இதன் விளைவாக, வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்த முடியாமல், இத்திட்டம் தொடர்பான முழு முதலீடும் எந்தப் பயன்பாடும் இன்றி காணப்படுகின்றது.	2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம், ஆய்வக மட்டத்திலிருந்து சோதனை அளவிலான உற்பத்திக்கு முன்னேறியதுடன், 2012 ஆம் ஆண்டில் இந்திய உர கம்பனி ஒன்றினுடனான தொழில்நுட்பக் கூட்டுறவு உட்பட உள்நாட்டு மற்றும் சர்வதேச அங்கீகாரங்களையும் பெற்றது. 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு சிறிய அளவிலான உற்பத்தித் தொழிற்சாலை, வணிகமயமாக்கலின் அளவு மற்றும் களச் சோதனைகளுக்கு உறுதுணையாக இருந்தது. இருப்பினும், வணிகமயமாக்கலுக்குத் தேவையான போதுமான கொள்கை மற்றும் நிதி ஆதரவு இல்லாததால் இதன் உற்பத்தி இடைநிறுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் இத்திட்டம் கைவிடப்பட்டமையானது, நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வெளிப்புறக் காரணிகளினாலேயே நிகழ்ந்தது.	சொத்துக்களை எதிர்பார்த்த நோக்கங்களுக்காக வினைத்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	கம்பனி 2021 ஆம் ஆண்டில் 62 அறைகளுடன் கூடிய	ஆண்டின் இறுதியில் பயன்படுத்தப்படாமல் உள்ளதாக அடையாளங்காணப்பட்ட 30	சொத்துக்களை எதிர்பார்த்த நோக்கங்களுக்காக

இரண்டு விடுதிக் கட்டிடங்களைக் கட்டியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றில் 30 அறைகள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.	அறைகளில், வாடகை ஒப்பந்தத்தின் கீழ் 4 அறைகள் SLIBTEC நிறுவனத்திற்குரியவை ஆகும். ஏனைய 26 அறைகளும் ஊழியர்களின் கோரிக்கைகள் மற்றும் செயற்பாட்டுத் தேவைகளின் அடிப்படையில் அவர்களுக்கு ஒதுக்கும் நடைமுறையில் உள்ளன எனவே, அவை நிரந்தரமாகப் பயன்படுத்தப்படாத அறைகளாகக் கருதப்படமாட்டாது.	வினைத்திறனாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

4. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

4.1 கூட்டாண்மைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கம்பனியினால் தந்திரோபாயத் திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பொருந்தக்கூடிய தேவைகளுக்கு அமைவாக ஒவ்வோர் ஆண்டும் ஒரு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் முறையாகத் தயாரிக்கப்பட்டு, உரிய அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டு வருகிறது. மேலும், கம்பனியின் முகாமையினால் தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதுடன், அத்திட்டம் 2026 ஜனவரியில் பரிசீலனைக்கும் அங்கீகாரத்திற்கும் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.	கம்பனியினால் தந்திரோபாயத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 கணக்காய்வு குழு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கூட்டாண்மை ஆளுகை வழிகாட்டல்களுக்ளு அமைய கம்பனியானது கணக்காய்வுக் குழுவினை நிறுவியிருக்கவில்லை.	பொருந்தக்கூடிய வழிகாட்டல்களுக்கு அமைவாக 2025 ஆகஸ்ட் மாதத்தில் கணக்காய்வுக் குழு நிறுவப்பட்டது. எனினும், நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவின் தலைவர் 2025 டிசம்பர் மாத இறுதிக்கு முன்னதாகவே பதவி விலகியதன் காரணமாக, அக்குழு செயலிழந்த நிலைக்குத் தள்ளப்பட்டது.	கூட்டாண்மை ஆளுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக கம்பனி ஒரு கணக்காய்வுக் குழுவினை நிறுவ வேண்டும்.